014476

கல்லூரிக் கல்வி இயக்குனர் அலுவலகம்
13 APR 2015

சுருக்கம்

உயர்கல்வி - கல்லூரிக்கல்வி – 2013–2014ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்ட 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் – கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்புதல் மற்றும் அதற்கென நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.66

நாள்: 13.04.2015
ஜய, பங்குனி 30
திருவள்ளுவர் ஆண்டு 2046
படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (நிலை) எண்.97, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 14.06.2013
2. அரசாணை (நிலை) எண்.98, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 17.06.2013
3. அரசாணை (நிலை) எண்.162, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 10.09.2013
4. அரசாணை (நிலை) எண்.25, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 06.02.2014
5. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.5659 /டி2/2014, நாள் 15.12.2014 மற்றும் 13.1.2015.

-----

ஆணை :-

மேலே ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்குவதற்கு நிருவாக அனுமதி அளித்தும், இக்கல்லூரிகளில் 5 பாடப்பிரிவுகளுக்கு 10 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மொழிப் பாடங்களுக்கு 2 உதவி பேராசிரியர்கள் ஆக மொத்தம் ஒவ்வொரு கல்லூரிகளுக்கும் தலா 12 உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2013–14ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்ட 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி பிப்ரவரி மற்றும் மார்ச் 2014 ஆகிய இரண்டு மாதங்களுக்கு 60 கௌரவ விரிவுரையாளர்களை தலா ரூ.10,000/– மாத தொகுப்பூதியம் என்ற அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டோர் வரும்வரை பணியமர்த்துவதற்கு ஒப்புதல் அளித்தும், இக்கௌரவ விரிவுரையாளர்களுக்கு சம்பளமாக ரூ.12/– இலட்சம் ஒப்பளிப்பு செய்தும், இத்தொகையினை ஏற்கனவே அரசாணை (நிலை) எண்.166, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 19.09.2013–ல் 1623 கௌரவ விரிவுரையாளர்களை பணியமர்த்திக் கொள்ள வழங்கப்பட்ட நிதி ஒப்பளிப்பில் உள்ள மீதத் தொகையிலிருந்து மேற்கொள்வதற்கு கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசு கல்லூரிகளில் 2011–12ஆம் கல்வியாண்டு முதல் காலியாகவுள்ள உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் மற்றும் புதியதாக துவங்கப்பட்ட பாடப்பிரிவுகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் மற்றும் 2013–14ல் புதியதாக துவங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஆகியவற்றில் காலியாகவுள்ள 3165 உதவிப்பேராசிரியர் பணியிடங்களில் 3165 கௌரவ விரிவுரையாளர்களை பணியமர்த்த அனுமதியும் மற்றும் ரூ.31.65 கோடி நிதி ஒப்பளிப்பும் அரசிடம் கோரப்பட்டது என்றும், இக்கருத்துருவை அரசு ஆய்வு செய்ததன் அடிப்படையில்

2014–15ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் சுழற்சி–1 பாடப்பிரிவுகளை நடத்துவதற்கு காலியாகவுள்ள 1623 உதவிப்பேராசிரியர் பணியிடங்களில் 1623 கௌரவ விரிவுரையாளர்களை பணியமர்த்திக் கொள்ள அனுமதியளித்து, அரசாணை (நிலை) எண்.207, உயர்கல்வி, நாள் 11.12.2014–ல் ஆணைகள் வெளியிடப்பட்டது என்றும், புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் திறக்கப்பட்டு, வகுப்புகள் துவக்கப்பட்ட நாள் முதல் உதவிப் பேராசிரியர் காலிப் பணியிடங்களில் 60 கௌரவ விரிவுரையாளர்கள் பணியாற்றி வருகின்றனர் என்றும், இவ்விரிவுரையாளர்களுக்கு 10 மாதங்களுக்கு ஊதியம் வழங்க வேண்டிய நிலை உள்ளது என்றும், எனவே இப்புதிய கல்லூரிகளில் சுழற்சி 1–ல் 60 கௌரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்வதற்கு அனுமதியும், ஒரு கௌரவ விரிவுரையாளருக்கு மாத ஊதியமாக ரூ.10,000/– வீதம் 60 கௌரவ விரிவுரையாளர்களுக்கு 10 மாதங்களுக்கு ரூ.60,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொண்டார்.

4. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை பரிசீலித்த அரசு அதனை ஏற்கலாம் என முடிவு செய்தது. அதற்கேற்ப 2013–2014ஆம் கல்வியாண்டில் ஒசூர், குமாரபாளையம், காங்கேயம், உத்திரமேரூர், பேராவூரணி, சிவகாசி, காரிமங்கலம், கோவில்பட்டி, கடலாடி, முதுகுளத்தூர், திருவாடணை மற்றும் கறம்பக்குடி ஆகிய இடங்களில் துவங்கப்பட்ட 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட உதவிப் பேராசிரியர் பணியிடங்களில் 60 கௌரவ விரிவுரையாளர்களை அரசின் அனுமதியின்றி பணியமர்த்திய கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கியும், இவர்களுக்கு ஊதியமாக ஜுன் 2014 முதல் மார்ச் 2015 வரை மாதம் ரூ.10,000/– வீதம் 10 மாதங்களுக்கு ரூ.60,00,000/– (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

<u>ஆடவர் கல்லூரிகள்</u> (ரூ.55,00,000/–)

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் – I. திட்டத்தில் சேராதது – AA கலைக் கல்லூரிகள் (ஆடவர்) – 33 தொழில் முறை, சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம். (த.தொ.கு. 2202–03–103–AA–3320)

<u>மகளிர் கல்லூரிகள்</u> (ரூ.5,00,000/–)

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103. அரசு கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் – I. திட்டத்தில் சேராதது – AB கலைக் கல்லூரிகள் (மகளிர்) – 33 தொழில் முறை, சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம். (த.தொ.கு. 2202–03–103–AB–3328)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதி 2015–16ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அதனை எதிர்நோக்கி, மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2015–16ஆம் ஆண்டிற்கான துணைமானிய கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இச்செலவினத்தை 2015–16ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த

நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதித் (கல்வி– I /வ.செ.பொது– I) துறைக்கு அனுப்பி வைக்குமாறும் கல்லூரி கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.18104/கல்வி–I/15, நாள் 13.04.2015ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.20 (இருபது).

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசுச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து கல்லூரி முதல்வர்கள்/ அனைத்து மண்டல
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள், (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –1/5/35 மற்றும் மதுரை.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
தொடர்புடைய கருவூல /சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 9
நிதித் (கல்வி. I / வ.செ.பொது. I / வ.செ.பொது.II) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/4/2015
பிரிவு அலுவலர்

கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை –6

ந.க.எண். 5659 /டி2/2015 நாள் : 15.04.2015

பொருள் : தமிழ்நாடு கல்லூரிக் கல்விப் பணி – 2014–15 ஆம் கல்வியாண்டில் – புதிய கல்லூரிகளில் காலியாகவுள்ள உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் – கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்த அனுமதி – அரசாணை பெறப்பட்டது – ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை: அரசாணை (நிலை)எண்.66, உயர்கல்வி(ஜி1)துறை, நாள். 13.04.2015.

*****

2013–14 ஆம் கல்வியாண்டில் துவங்கப்பட்ட புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் நலன் கருதி இக்கல்வியாண்டில் பணியமர்த்தப்பட்ட 60 கௌரவ விரிவுரையாளர்களுக்கு பார்வையில் காணும் அரசாணையில் அரசு பின்னேற்பு அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது. அரசாணையின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இணைப்பில் உள்ளவாறு தங்கள் கல்லூரிக்கு கௌரவ விரிவுரையாளர்கள் அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடலாகிறது.

1. பணியமர்த்தப்பட்ட கௌரவ விரிவுரையாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10,000/– வீதம் தொகுப்பூதியமாக வழங்கப்பட வேண்டும்.

2. கௌரவ விரிவுரையாளர்களுக்குரிய ஊதியம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பெற்று வழங்கப்பட வேண்டும்.

<u>ஆடவர் கல்லூரிகள்</u>

2202 – பொதுக் கல்வி – 03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர் கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் I திட்டத்தில் சேராதது – AA கலைக் கல்லூரிகள் (ஆடவர்) 33 தொழில் முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 02 ஊதியம்
**(த.தொ.கு.2202 03 103 AA 3320)**

<u>மகளிர் கல்லூரிகள்</u>

2202 – பொதுக் கல்வி – 03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் I – திட்டத்தில் சேராதது – AB கலைக் கல்லூரிகள் (மகளிர்) 33 – தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 02 ஊதியம் (த. தொ. கு. 2202 – 03 – 103 AB 3328)

தங்கள் கல்லூரிக்கு பாட வாரியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள விரிவுரையாளர் பணியிடங்களுக்கு மிகையாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தற்போது ஒப்பளிக்கப்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் பணியிடங்கள் மிகையாயிருப்பின் அப்பணியிடங்கள் குறித்த விவரத்தினை இயக்குநருக்கு உடன் தெரிவிக்க வேண்டும்.

இச்செயல்முறைகளை பெற்றுக் கொண்டமைக்கு பெறல் ஏற்பினை உடன் அனுப்ப வேண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ)

இணைப்பு: மேற்கண்டபடி

பெறுநர்
சார்ந்த அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்கள்.
நகல்: தொடர்புடைய மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
----- (தகவலுக்காகவும், தக்க மேல் நடவடிக்கைக்காகவும்.)
நகல்: சம்பள கணக்கு அலுவலர்/சார்ந்த மாவட்ட கருவூல அலுவலர்கள்/சார்நிலை கருவூல அலுவலர்கள்

நகல்: "எச் பிரிவு" கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை –600 006.

## Directorate of Collegiate Education, Chennai - 6

## GL ALLOTED TO SHIFT-1 FOR 12 NEW COLLEGES

RC.No.5659/D2/2014 Dt. 04.2015

| Sl.No. | College Name | Tamil | English | Maths | Commerce | Com.Sci | No.of GL Alloted |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Govt. Arts and Science College, (Co-Ed) Kangeyam, | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| 2 | Govt. Arts and Science College, (Co-Ed) Komarapalayam, | 1 | - | - | - | - | 1 |
| 3 | Govt. Arts and Science College, Karimangalam, (Women), | 1 | 2 | - | 1 | 1 | 5 |
| 4 | Govt. Arts and Science College,(Co-Ed) Hosur, | 2 | 2 | - | 2 | 1 | 7 |
| 5 | Govt. Arts and Science College,(Co-Ed) Peravurani | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| 6 | Govt. Arts and Science College, (Co-Ed) Karambakudi | 1 | 1 | 1 | 1 | 1 | 5 |
| 7 | Govt. Arts and Science College,(Co-Ed) Sivakasi | 1 | 1 | - | - | - | 2 |
| 8 | Govt. Arts and Science College, (Co-Ed) Kadaladi | 2 | 1 | 1 | 1 | 1 | 6 |
| 9 | Govt. Arts and Science College, (Co-Ed) Thiruvadanai | 2 | 2 | 1 | 1 | 2 | 8 |
| 10 | Govt. Arts and Science College, (Co-Ed) Mudhukulathur | 2 | 1 | 1 | 1 | 1 | 6 |
| 11 | Govt. Arts and Science College, (Co-Ed), Kovilpatti | - | - | - | - | - | --- |
| 12 | Govt. Arts and Science College, Uthiramerur | 3 | 2 | 1 | 1 | - | 7 |
| | | 17 | 14 | 7 | 10 | 9 | 57 |

15.4.15

Director of Collegiate Education (F.A.C)

New colleges teaching staff detais GL posting update
13.04.2015